# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 10/2020** **Date:11.02.2026.**

**(DW1)- Shagaya Justus**

<u>வாதி தரப்பு குறுக்கு **விசாரணை**</u>

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் மறைமவாட்டத்தில் இருந்து எனக்கு அனுப்பட்ட கடிதம் என்றால் சரிதான். மேற்படி கடிதத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் என்னிடம் இல்லை, மேற்படி கடிதம் நேரடியாக என்னிடம் கொடுக்கப்படவில்லை. மேற்படி கடிதத்தில் அறி உறுத்தியப்படி நான் செயல் படவில்லை என்றால் சரிதான், மறைமவாட்ட விதிமுறைகளுக்கு முறனாக இருப்பதால் பின்பபற்ற வில்லை. மேற்படி கடித்தில் உள்ள அறிவுதல்கள் விதிமுறைகளுக்கு முறனாக இருக்கிறது என்று ஆயர்ருக்கோ மறைமவாட்டதிற்கோ புகார் அல்லது மேல்முறையீடு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி என்னால் கொடுக்கப்பட்ட கடிதத்தை நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிய நபருக்கு மேற்படி கடிதத்தை எழுதுவதற்கு மறைமவாட்ட சட்டம் அதிகாரம் அளிக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்தை பொறுத்து முடிவு செய்ய வேண்டியது பங்க தந்தை என்றால் சரிதான். பங்கு தந்தையாகிய நாங்கள் ஆயர், மறைமவாட்ட விதிகளுக்கும், திருசபைக்கு சட்டங்கள் கட்டுப்பட்டவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடிததின் படி நான் செயல்படாததால் ஆயர் மற்றும் மறைவமாவட்ட விதிகளை நான் மதிக்கவில்லை என்று நான் எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரியல்ல, குருகுல முதல்வரால் வழங்கப்பட்டதாகும். ஆயர் இல்லாத பட்சத்தில் குருகுல முதல்வருக்கு மேற்படி கடிதம் அனுபுவதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான், ஆனால் பங்கு தந்தைக்கு ஆனையிடுவதற்கு அதிகாரம் கிடையாது.

3. மேற்படி சங்கதி பி.வா.ஆ. 2 ஆவணத்தில் துலங்கும் என்றால் சரிதான். வாதியும் வாதியின் குடும்பத்தாரும் சித்தன் தோப்பு பங்கு தளத்தில் பாரம்பரிய உறுப்பினர்கள் என்றால் சரிதான். வாதியின் தந்தை மேற்டி பகுதியில் செல்வாக்கும் சொல்வாக்கும் உள்ளவர் என்றாலும் 3 முறை பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்தார் என்றால் சரிதான். வாதி அவரது பங்கு தளதில் தனது குழந்தையின் திருமுழக்கு நிகழ்வு நடத்த கேட்பது அவரது உரிமை என்றால் சரிதான். மேற்படி பங்கின் பங்கு தந்தையாக எனக்கு மேற்படி குழந்தைக்கு திருமுழக்கு கொடுக்க வேண்டியது எனது கடமை என்றால் சரிதான், விதிமுறைகளுக்கு உட்பட்டு கொடுப்பேன்.

4. திருமுழுக்கானது ஒரே நாளில் முடிவு செய்து நிகழ்த்தி விட முடியாது என்றாலும் அதற்கான வழிமுறைகளை பின்பற்றி தான் நடத்த வேண்டும் என்றாலும் சரிதான். மேற்படி விதிமுறை அனைத்து மறைவமாவட்ட பங்கு தந்தைகளுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். 27.12.2019 அன்று வாதியின் குழந்தைக்கு சுங்காண்கடை திருதளத்தில் மறைமவாட்ட அறிவுறுத்தலின் படி ஒரே நாளில் திருமுழுக்கு நடத்தப்பட்டது என்றால் சரிதான், திரு தளங்களில் அவ்வாறு நடத்தலாம். நான் எனது திரு தளத்தில் வாதியின் குழந்தைக்கு திருமுழுக்கு கொடுக்க மறுத்ததால் சுங்காண்கடை திரு தளத்தில் ஏற்கனவே தகுந்த தயாரிப்புகள் இருந்ததாலும் ஒரே நாளில் திருமுழுக்கு நடத்தப்பட்டது என்றால் சரியல்ல, ஒரு வாரத்திற்கு முன்பு வாதியால ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

5. நான் குறிப்பிடும் ஏற்பாடு என்பது வாதியால் சித்தன்தோப்பு தேவாலயத்தில் செய்யத ஏற்பாடுகளே தவிர சுங்காண்கடை தேவலாயத்தில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வருத்தங்கள் துன்பங்கள் கஷ்டங்கள் நஷ்டங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்ட மறைமவாட்டம் வாதியின் கோரிக்கை சட்ட விதிகளுக்கு உட்பட்டதும் தகுந்த ஏற்பாடுகளுக்கும் உரியது மானதாக இருந்தததால் சுங்காண்கடை தேவலாயத்தில் திருமுழுக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடிதத்தை வழங்குவதற்கு முன்பே இந்த திருமுழுக்கு சம்பந்தமாக ஆயர் இல்லாத்தில் கலந்து ஆலோசிக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. வாதியின் குழந்தைக்கு சுங்காண்கடை திரு தளத்தில் திருமுழுக்கு வழங்கப்பட்டதை பொறுத்து நான் கேள்வி கேட்கவில்லை என்றால் சரிதான். எனது தேவலாயத்தில் வாதியின் குழந்தைக்கு திருமுழுக்கு வழங்க கூடாது என்பது குறித்து யாரும் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் திட்டம்மிட்டு வாதியின் குடும்ப கௌரவத்தை மற்றும் நற்பெயரை கெடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் மேற்குரியவாறு செயல்பட்டேன் என்றால் சரியல்ல. சித்ததன்தோப்பு தேவலாயத்திற்கு பங்கு பேரவை என்ற அமைப்பு உண்டு என்றாலும் மேற்படி அமைப்பிற்கு பங்கு தந்தையாகிய நான் தான் தலைவர் என்றாலும் சரிதான்.

7. மேற்படி பேரவையில் பொது மக்களின் ஒருவர் உபதலைவராக தேர்ந்தெடுக்கப்படுவர் என்றால் சரிதான். தாவா திருமுழுக்கு காலத்தில் வாதியின் தந்தை திரு. அருள்ராஜ் உபதலைவராக இருந்தார் என்றால் சரிதான். சித்தன் தோப்பு பங்கு பேரவை நிர்வாகத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் சரியாக நினைவில் இல்லை சுமார் 20 நபர்க இருக்கலாம். மேற்படி ஆலயத்தில் உடைய பங்கு பேரவையானது ஆலயத்தின் உடைய முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் கலந்து அலோசித்து செயல் படும் என்றால் சரிதான், ஆனால் விதிவிலக்குகளும் உண்டு. இந்த வாதியின் குழந்தையின் திருமுழுக்கு சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதா என்றால் ஆரோசிக்கப்படவில்லை.

8. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணங்களில் திருமுழுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களான பி.வா.சா.ஆ.3 முதல் 9 வரையான ஆவணங்கள் சித்தன்தோப்பு பங்கு பேரவை சம்பந்தமான ஆவணங்கள் என்றால் சரிதான். பங்கு பேரவைக்கு என்று தீர்மான புத்தகமும் வருகை பதிவேடும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிவேடுகளில் வாதியின் குழந்தையின் திருமுழுக்கு சம்பந்தமான விவாதங்களுக்கான பதிவுகள் உள்ளது என்றால் இல்லை. நான் குறிப்பிடும் பங்கு பேரவையின் பதிவேடுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தற்போது என்னால் தாக்கல் செய்யமுடியாது. என்னிடம் காட்டபடும் பி.வா.சா.ஆ.11 ஆவணம் எனக்கு வழங்கப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

9. மேற்படி ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் குருகுல முதல்வர் மூலம் எனக்கு கிடைத்தது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 20.02.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.